PRGI (RNI) No: TNTAM/2023/88599

திரை மொழி
THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

திரை: 03	மொழி : 12	ஜூலை - 2026	பக்கம்: 8	விலை: ரூ.10
Volume : 03	Issue : 12	July - 2026	Page: 8	Price: Rs. 10



கவிப்பேரரசுக்கு ஞானபீடம்



எழுத்துக்களே செங்கோலாக, எழில் தமிழை இந்திய இலக்கியத்தின் அரியாசனத்தில் அமர்த்திய கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்குத் தேசத்தின் மிக உயரிய ஞானபீட விருது வழங்கப் பட்டிருப்பது தமிழ்க்கூறும் நல்லுலகிற்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. காலத்தின் ஓட்டத்தில் கருத்தியல் ரீதியாக மத்தியில் மாறுபட்ட அரசு அமைந்திருப்பினும், கலையுலகின் கதிரவனாய் விளங்கும் அவரது அசாத்திய தமிழ்ப்பணிக்குத் தேசம் இந்த உயரிய அங்கீகாரத்தை வழங்கியே தீர வேண்டியுள்ளது. அகிலன், ஜெயகாந்தன் ஆகிய மாபெரும் ஆளுமைகளுக்குப் பிறகு, ஒரு தமிழ்ப் பேனா இந்திய இலக்கியத்தின் உச்சாணிக் கொம்பைத் தொட்டிருப்பது நம் அனைவருக்கும் பெருமிதம். தற்காலக் கருத்து முரண்பாடுகள் மற்றும் அரசியல் எல்லைகளைக் கடந்து, அவரது கவித்துவத்திற்கு வழங்கப்பட்ட இந்த அங்கீகாரம் சாலப் பொருத்தமானது!

அரை நூற்றாண்டுப் பயணம்

ஒரு படைப்பாளியின் உழைப்பு என்பது ஏதோ ஓரிரவில் விளைந்து விடுவதில்லை. தனது 19ஆம் வயதில் 'வைகறை மேகங்கள்' என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் தமிழ் இலக்கியப் பரப்பில் தடம் பதித்த வைரமுத்து, அண்மையில் வெளியான ஐம்பூதங்களின் பேராற்றலைப் பேசும் 'மகா கவிதை' நெடுங்கவிதை வரை 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து எழுதி வருகிறார். இதுவரை 40க்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ் மொழிக்குக் கொடையாக

> ஏழு தேசிய விருதுகள், ஆறு மாநில விருதுகள் இன்னும் பத்மஸ்ரீ பத்மபூஷன் என விருதுகளை பெற்ற பொழுதுகளைவிட ஞானபீடம் பெறுகிறபோது சற்றே கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன்.

அளித்துள்ளார். "என்ன விதைக்கிறோம் என்று தெரியாமலையே இந்த நிலத்தை நான் உழுது கொண்டிருந்தேன்" என்று தனது இளமைக் காலத்தைப் பற்றி

தொடர்ச்சி பக்கம் 4



டிஸ்கவரி புக் பேலஸ்



டிஸ்கவரி ஆர்ட் கேலரி

டிஸ்கவரி புக் பேலஸ்

1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,

சென்னை-78 | 9940446650

திரையிடல், நூல் வெளியீட்டுக்கான

70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்



பிரபஞ்சன் அரங்கம்



ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்

ஹபிபீ திரைப்படத்தின் வெற்றி விழா





சென்னை கே.கே. நகர் டிஸ்கவரி புக் பேலஸ் மற்றும் திரை மொழி குழுமம் இணைந்து நடத்திய, திரைப்படக் கலந்துரையாடல் மற்றும் வெற்றி விழா 2026 ஜூலை 3, மிக சிறப்பாக நடந்தது.

இந்த வெற்றி விழாவில் இயக்குநரும், நடிகருமான கஸ்தூரி ராஜா கலந்து கொண்டு தன் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு சிறப்பு செய்தார்.

ஹபிபீ படத்தின் தயாரிப்பாளர் இப்ராஹிம், படத்தின் கதை ஆசிரியர் P.S.முகமது அமீன், எழுத்தாளர், இயக்குநர், பாரதி கிருஷ்ணகுமார் எழுத்தாளர், இயக்குநர் பாஸ்கர் சக்தி, இயக்குநர் கேபிள் சங்கர், இயக்குநர், எழுத்தாளர் சோமிதரன், எழுத்தாளர், உலக சினிமா பாஸ்கரன், திரை விமர்சகர் ஆசிப் மீரான், கவிஞர் முனைவர் இரா.மஞ்சுளா, எழுத்தாளர் ஜா.தீபா, திரைக்கலைஞர் ரேகா, எழுத்தாளர் நார்சிம், மனநல மருத்துவர் பர்வீன் சுல்தானா, சமூக செயற்பாட்டாளர் அபிரின் இப்ராஹிம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்

இதில் பாரதி கிருஷ்ணகுமார் அவர்கள் படத்தைப்பற்றி ஆய்வுரைப்போல சிறப்புரை யாற்றினார் இணை துணை உதவி இயக்குநர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். திரைமொழி ஆசிரியரும், குறும்பட இயக்குநருமான ஆர்.சுப்ரமணிய பாரதி தொகுத்து வழங்கினார்.

தமிழ் சினிமாவில் இஸ்லாமியக் கதாபாத்திரங்கள் பல ஆண்டுகளாக தீவிரவாதி, கறிக்கடை பாய், பிரியாணிக் கடை பாய் போன்ற குறுகிய அடையாளங் களுக்குள் மட்டுமே சித்தரிக்கப்பட்டன. அந்தச் சலித்துப்போன பிம்பங்களை உடைத்து, தமிழ் முஸ்லிம்களின் உண்மையான வாழ்வியலையும், அவர்களின் அன்றாட இன்ப–துன்பங்களையும், குடும்ப உறவுகளையும், பண்பாட்டு மரபுகளையும் மிகுந்த நேர்மையுடனும் நுட்பத்துடனும் பதிவு செய்திருக்கும் திரைப்படம்தான் 'ஹபீபி'.

இயக்குநர் தோழர் மீரா கதிரவன், இதுவரை தமிழ் சினிமா அதிகம் தொடாத ஒரு களத்தைத் தேர்ந்தெடுத்து, எந்தவித மிகைப்படுத்தலுமின்றி, அந்த மண்ணின் மணத்தையும் மக்களின் வாழ்க்கையையும் உண்மைக்கு நெருக்கமாக திரையில் உயிர்ப்பித்திருக்கிறார். திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரை பின்னணியாகக் கொண்டு, கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை, தொழிலின் வீழ்ச்சி, வளைகுடா நாடுகளுக்கான புலம்பெயர்வு, காதல், குடும்பப் பாசம், பொருளாதார மாற்றங்கள் என ஒரு குடும்பத்தின் நாற்பது ஆண்டு கால வாழ்க்கைப் பயணத்தை நெகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறது. திருநெல்வேலி வட்டார மொழி, தமிழ் முஸ்லிம்களின் பேச்சுவழக்கு, அரபுச் சொற்களின் இயல்பான பயன்பாடு, திருமணச்சடங்குகள், ஜனாஸா தொழுகை, சுன்னத், உரூஸ், பாங்கு போன்ற வாழ்வியல் கூறுகள் அனைத்தும் எந்தச் செயற்கைத்தனமும் இன்றி திரையில் இயல்பாக மலர்கின்றன.

கஸ்தூரி ராஜா தனது அனுபவம் மிக்க நடிப்பால் பாரம்பரியத் தொழிலை உயிராக நேசிக்கும் தந்தையின் வலியையும் பாசத்தையும் மனதை உருக்கும் வகையில் வெளிப்படுத்துகிறார். ஈஷா, மாளவிகா மனோஜ், தனஸ்ரீ சுதாகரன் ஆகியோரும் தங்கள் கதாபாத்திரங் களுக்கு நியாயம் செய்துள்ளனர். சாம் சி.எஸ். அவர்களின் பின்னணி இசையும், மகேஷ் முத்துசாமியின் ஒளிப்பதிவும் படத்தின் உணர்வுகளை மேலும் ஆழப்படுத்து கின்றன. குறிப்பாக, அந்தக் காலத்தின் வாழ்க்கை முறையையும் மனிதர்களின் எளிமையையும் திரையில் கண்முன் நிறுத்துகின்றன.

திரைக்கதை வழக்கமான வணிகச் சினிமா அம்சங்களைத் தவிர்த்து, வாழ்க்கையின் இயல்பான ஓட்டத்தையே நம்பி நகர்கிறது. அதனால் சிலருக்கு மெதுவாகத் தோன்றினாலும், அதுவே இந்தப் படத்தின் தனித்துவமாக மாறுகிறது. அதேவேளையில், கதைக்குள் பொதிந்திருக்கும் அரசியல் மற்றும் சமூகக் கூறுகளை இன்னும் ஆழமாக ஆராய்ந்திருக்கலாம் என்ற எண்ணமும் தோன்றுகிறது.

எனினும், ஒரு சமூகத்தை அதன் உண்மையான முகத்தோடு, மரியாதையுடனும் மனிதநேயத்துட னும் பதிவு செய்திருப்பதே 'ஹபீபி' திரைப்படத்தின் மிகப்பெரிய வெற்றி. உலகச் சினிமாவில் ஈரானிய திரைப்படங்கள் தரும் மனிதநேய உணர்வையும், மண்ணின் மணத்தையும் நினைவூட்டும் இந்த முயற்சிக்காக இயக்குநர் தோழர் மீரா கதிரவன் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

— **பாக்கியராஜ் பரசுராமன்**
செங்கொடி குறும்பட இயக்குநர்


இயக்குநர் கஸ்தூரி ராஜா


எழுத்தாளர்
பாரதி கிருஷ்ணகுமார்


உலக சினிமா பாஸ்கரன்


இயக்குநர்
மீரா கதிரவன்


இயக்குநர்
பாஸ்கர் சக்தி


திரை விமர்சகர்
ஆசிப் மீரான்


குறும்பட இயக்குநர்
ஆர். சுப்ரமணிய பாரதி


டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ்
மு.வேடியப்பன்


கவிஞர் முனைவர்
இரா.மஞ்சுளா


எழுத்தாளர் ஜா.தீபா


மனநல மருத்துவர்
பர்வீன் சுல்தானா


எழுத்தாளர் நார்சிம்

“நூறு சாமி” ஓர் கலந்துரையாடல்





ஜூலை 15, 2026 சென்னை கே. கே. நகர் டிஸ்கவரி புக் பேலஸ் மற்றும் திரை மொழி குழுமம் இணைந்து நடத்திய, இயக்குனர் சசியின் "நூறு சாமி" திரைப்படக் கலந்துரையாடல் நிகழ்ச்சி மிக சிறப்பாக நடந்தது.

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நூறு சாமி கதையின் நிஜ நாயகன் பாஸ்கர் அவர்கள் வந்து சிறப்பு செய்தது இன்னொரு கூடுதல் சிறப்பாக அமைந்தது.

தமிழ் சினிமாவின் யதார்த்தப் போக்கைப் பற்றிய மிக முக்கியமான உரையாடலாக அமைந்தது. பத்திரிகை எழுத்தாளர்கள், திரைப்பட இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் சினிமா பின்னியம் பேசும் எழுத்தாளர்கள் எனப் பல்துறை ஆளுமைகள் பங்கேற்ற இந்த நிகழ்வில், இயக்குநர் சசி இடையேயான உரையாடல் தமிழ் சினிமாவின் ஆன்மாவைத் தொடுவதாக இருந்தது.

தமிழ் சினிமாவில் மனித உறவுகளின் சிக்கல்களையும், காதலின் உன்னதத்தையும், எளிய மனிதர்களின் வாழ்வியலையும் சசி அளவிற்கு ஆழமாகப் பதிவு செய்த இயக்குநர்கள் மிகச் சிலரே. 'சொல்லாமலே' திரைப் படத்தில் தொடங்கி இன்று 'நூறு சாமி' வரை அவரது ஒவ்வொரு படைப்பும் ஏதோ ஒரு வகையில் பார்வையாளனின் மனசாட்சியைக் குடைந்து கொண்டே இருக்கிறது.

சசியின் சினிமா என்பது அதிரடி ஆக்சனோ, பிரம்மாண்டமான திருப்பங்களோ கொண்டது அல்ல; மாறாக, அது மனித மனங்களின் மெல்லிய உணர்வுகளைப் பேசும் கலைவடிவம்.

சொல்லாமலே (1998): காதலை வார்த்தைகளால் சொல்லாமல், செயல்களாலும் தியாகத்தாலும் மட்டுமே கடத்த முடியும் என்பதை அசாத்தியமான திரைக்கதையால் நிரூபித்த படம். தமிழ் சினிமாவின் ஆகச்சிறந்த அறிமுகப் படங்களில் இதுவும் ஒன்று.

ரோஜாக்கூட்டம் (2002) & டிஷ்யூம் (2006): காதலுக்குள் இருக்கும் ஈகோ, நட்பு, மற்றும் மாற்றுத்திறனாளி மனிதரின் காதல் எனப் பல்வேறு கோணங்களில் உறவுகளின் ஆழத்தை ஆராய்ந்தவை.

பூ (2008): சசியின் திரைப் பயணத்தில் மிக முக்கியமான மைல்கல். ச.தமிழ்ச்செல்வனின் 'வெயிலோடு போய்' சிறுகதையைத் தழுவி எடுக்கப் பட்ட இப்படம், ஒரு பெண்ணின் தூய்மையான காதலையும், சமூக எதார்த்தத்தையும் அப்படியே திரையில் கொண்டு வந்தது.



பிச்சைக்காரன் (2016): வணிக ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் சசி அடித்த மிகப்பெரிய சிக்ஸர். தாய்ப் பாசத்தின் உச்சத்தை ஒரு கமர்ஷியல் சட்டகத்திற்குள் நேர்த்தியாகக் கடத்தி யிருந்தார்.

சிவப்பு மஞ்சள் பச்சை (2019): அக்கா தம்பி பாசம், மாமன் மைத்துனன் மோதல் எனப் பழகிப் போன உறவுமுறையை ஈகோவின் பின்னணி யில் புதுமையாகக் கையாண்டிருந்தார்.

கலந்துரையாடல் நிகழ்வில், எழுத்தாளர்கள், இணை, துணை உதவி இயக்குநர்கள், ரசிகர்கள் இயக்குநர் சசியிடம் 'நூறு சாமி' படம் வளர்ந்த விதம் மற்றும் அதில் நுண்ணிய உணர்வுகளை வெளிப்படுத்திய விதம் குறித்துக் கேள்விகளை எழுப்பி, நீண்ட நேரம் விவாதித்தார்கள். அதற்கு இயக்குநர் சசி அளித்த பதில்கள், ஒரு படைப்பாளி தன் படைப்பின் மீது கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தின.

"இந்த ஒரு கதைக்காக நான் ஐந்து ஆண்டுகள் எடுத்துக் கொண்டேன்" என்று சசி குறிப்பிட்டார். இன்றைய வேகமான சினிமா உலகில், ஐந்து ஆண்டுகள் ஒரு கதையைச் செதுக்குவது என்பது சாதாரண விஷயமல்ல. மண்வாசனை, எளிய மனிதர்களின் வலி, வாழ்வியல் எதார்த்தம் போன்ற வற்றைத் திரைமொழியாக மாற்றுவது எளிதல்ல. அதைத் திரையில் சாத்திய மாக்கசசிதன்உழைப்பைமுழுமையாகக் கொட்டியுள்ளார்.

கலந்துரையாடலின் போது சசி ஒரு ஆழமான கருத்தைப் பதிவு செய்தார்:

"திரைப்படம் என்பது இயல்பாக வரும் வரையிலும், ரசிகர்கள் அதை ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அதற்காக நான் உழைப்பை அதிகம் கொடுக்கிறேன். உழைப்பு இல்லாமல் எந்த ஒரு திரைப்படமும் வெற்றி பெறாது. அதில் நடிகர்களோ, புதுமுக நடிகர்களோ இருந்தாலும் அது இரண்டாம் பட்சம் தான்."

ஸ்டார் வேல்யூ (Star Value) அல்லது நடிகர்களின் பிரபல்யத்தை நம்பி அவர் படம் எடுப்பதில்லை. கதையின் நேர்மையும், அதை உருவாக்கப் போடப்படும் உழைப்பும் மட்டுமே ஒரு படத்தை ஜெயிக்க வைக்கும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

இத்தகைய ஆழமான, அர்த்த முள்ள திரைப்படக் கலந்துரையாடல் நிகழ்வுகள் ஏதோ ஒரு நாளுடன் நின்றுவிடாமல், தமிழ் திரையுலகில் தொடர்ச்சியாக நடைபெற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இலக்கியத்தையும் சினிமாவையும் இணைக்கும் பாலமாக விளங்கி, தொடர்ந்து இது போன்ற மாற்றுச் சிந்தனைக்கான விழாக்களை மிக நேர்த்தியாக ஏற்பாடு செய்து வரும் டிஸ்கவரி புக் பேலஸ் நிறுவனரும், திரைப்பட தயாரிப்பாளருமான வேடியப்பன் அவர்களுக்கும்; இந்த அற்புத நிகழ்வை முன்னெடுத்த 'திரை மொழி' மாத இதழ் குழுமத்தின் நிறுவனரும், திரைப்பட இயக்குனரு மான ஆர்.சுப்ரமணிய பாரதி, பொறுப்பாசிரியர் மூர்த்தி நடராஜன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எங்களது மனமார்ந்த பாராட்டு களையும் நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

படைப்பாளிகளையும் ரசிகர்களை யும் நேருக்கு நேர் சந்திக்க வைக்கும் இவர்களின் இந்த முயற்சி, வளரும் இளம் இயக்குநர்களுக்கு ஒரு பெரும் வழிகாட்டியாக அமையும். தமிழ் சினிமாவில் இன்னும் எண்ணற்ற தரமான, முற்போக்கான மற்றும் சர்வதேசத் தரம் வாய்ந்த திரைப்படங்கள் உருவாவதற்கும், தயாரிப்பாளர்கள் அத்தகைய கலைப் படைப்புகளைத் துணிவோடு தயாரிப்பதற்கும் இவர்களின் இத்தகு ஆலோசனைக் களங்கள் பெரும் உந்துசக்தியாகவும் உதவியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நல்ல சினிமாவுக்கான இந்த கூட்டுப் பயணம் இன்னும் பல உயரங்களைத் தொடட்டும்!

சிவயோகி மவுரியன்
திரைப்பட இயக்குநர்,

முதல் பக்க தொடர்ச்சி



அவர் உதிர்த்த வார்த்தைகள் மிக ஆழமானவை. தான் எதிர்காலத்தில் என்ன ஆகப்போகிறோம், எத்தகைய அறுவடையைச் செய்யப் போகிறோம் என்றே தெரியாமல், வறுமைச் சூழலிலும் வாசிப்பின் மீது கொண்ட தீராப் பசியால் தொடர்ந்து நிறைய வாசித்துக் கொண்டும், படித்துக் கொண்டும் இருந்த உழைப்பையே இந்த வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

எந்தப் பின்னணியில் இருந்து இந்த இலக்கிய மேதை வந்தான் என்று எப்பொழுதும் மறைத்ததே இல்லை. இரவில் போர்த்திக் கொள்வதற்குக் கோணிப்பைக்காகச் சண்டையிட்ட வறுமையின் பிடியிலிருந்து, ஒரு காரிருள் இரவில் திருக்குறளோடு முட்டி மோதி, அதன் ஆழத்தை ஆராய்ந்த வாலிபப் பருவம் வரையிலான தனது எளிய வாழ்வை 'இதுவரை நான்' என்ற சுயசரிதைப் பதிவில் அவரே நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார். வறுமையின் அடுப்பங்கரையிலிருந்து புறப்பட்ட ஒரு பேனா, இன்று ஞானபீடத்தின் வாசலை எட்டியிருப்பது ஒரு தனிமனிதனின் வெற்றியல்ல; அது

கடவுள் மறுப்போடு ஒரு எழுத்தாளன் இங்கே உலாவி, தமிழில் நீங்காத படைப்புகளை உருவாக்கிய பெருமை புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்குப் பிறகு கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு மட்டுமே உரியது.

பேருழைப்பின் வெற்றி.

மண்ணின் ஆன்மாவை மீட்ட நாவல்கள்

தமிழ் நாவல் உலகிற்கு வைரமுத்துவின் வரவு என்பது ஒரு புதிய அழகியலையும், பெருவாரியான வாசகத் திரளையும் உருவாக்கியது. வைகை அணை நீரால் சூழப்பட்ட

'இலக்கியத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும்'

ஞானபீட விருதை பெற்றுக் கொண்ட கவிஞர் வைரமுத்து பேசியதாவது: பெருமைமிக்க இந்த ஞானபீட விருதைப் பெற்றுக்கொண்டது மகிழ்ச்சி தருகிறது. தமிழ்நாட்டின் தென்மேற்கு மூலையில் இந்தியாவின் வரைபடத்துக்கு சிக்காத ஒரு கடைக்கோடியில் 60 வீடுகளே கொண்ட மெட்டூர் என்ற சிற்றூரில் ஒரு விவசாய குடும்பத்தில் தான் பிறந்தேன். 1950 களில் வைகை நதியின் குறுக்கே வைகை அணை கட்டப்பட்ட போது 14 கிராமங்கள் காலி செய்யப்பட்டன. அதில் ஒன்றுதான் நான் பிறந்த மெட்டூர் என்ற சித்தூர்.

அந்த கிராமத்தின் தாயொருத்தி கண்ணீரோடு கதறி கொண்டே களை எடுக்கிறார் .அவள் இடுப்பில் ஒரு பெண் குழந்தை, கைப்பிடியில் ஓர் ஆண் குழந்தை. அப்போதெல்லாம் அவளுக்கு தெரியாது இடுப்பில் உள்ள பெண் குழந்தை அடுத்த ஆறு மாதத்தில் இறந்து போகும் என்றும், கைப்பிடியில் உள்ள சிறுவன் அடுத்த எழுபது ஆண்டுகளில் ஞானபீடம் பெறுவார் என்றும். அந்த சிறுவன் தான் இந்த ஞானபீட மேடையில் உங்கள் முன் நிற்கிறார் அவர் பெயர் வைரமுத்து.


இந்த ஞானபீடம் என்பது ஒவ்வொரு எழுத்தாளனும் எட்ட துடிக்கு உயரம் ஆனால் எட்ட முடியாத உயரம். துயரங்கள் என்னை இந்த உயரத்துக்கு அழைத்து வந்தன. என் இலக்கியத்துக்கான உள்ளடக்கம் வெளியிலிருந்து வரவில்லை ஒரு நிழலை போல என் வாழ்வுக்கு பக்கத்தில் அது நடந்து கொண்டே வந்தது.

இது அறுபதாம் ஞானபீடம். என் அரை நூற்றாண்டு எழுத்துக்களை பாராட்டி ஞானபீடம் 60 கிராம் அமிர்த புட்டி வழங்கி இருக்கிறது. இது எனக்கு மட்டும் சொந்தம் என்று உரிமை கொள்ள முடியாது. ஒரு கிராம் திருவள்ளுவருக்கு ஒரு கிராம் இளங்கோவடிகளுக்கு ஒரு கிராம் கம்பர், பாரதிக்கு, பாரதிதாசனுக்கு, அண்ணா, கலைஞர் கண்ணதாசன் உள்ளிட்டோருக்கு ஆளுக்கொரு சொட்டு. கடைசியாய் ஒரு சொட்டு கரண்டியில் ஒட்டி இருக்கும் ஈரப்பசை மட்டும் என் பங்கு.

ஏழு தேசிய விருதுகள், ஆறு மாநில விருதுகள் இன்னும் பத்மஸ்ரீ பத்மபூஷன் என விருதுகளை பெற்ற பொழுதுகளைவிட ஞானபீடம் பெறுகிற போது சற்றே கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விருதினால் என் இலக்கிய பொறுப்பு மேலும் அதிகரிக்கிறது. இந்த விருதுக்கான புகழை என் தமிழ் சமூகத்திற்கு பகிர்ந்து கொடுப்பேன்.

'நாம் இலக்கியத்திற்கு ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவக்கூடாதா?' இந்தியாவின் தலைநகரத்திலிருந்து கேள்வியை வைரமுத்து முன்வைத்துவிட்டு தமிழ்நாட்டுக்கு செல்கிறார் என கவிஞர் வைரமுத்து தனது பேச்சை நிறைவு செய்தார்.

மக்களின் வாழ்வியலையும், தங்களின் சொந்த நிலத்தை இழந்த அகதிகளின் கண்ணீரையும் 'கள்ளிக்காட்டு இதிகாசம்' வழி வைகை அணையை இலக்கியத்தால் மீண்டும் கட்டி எழுப்பினார். இந்த நாவல் மத்திய அரசின் சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுத் தந்தது. அவரது 'கருவாச்சி காவியம்' என்பது வெறும் புதினம் அல்ல; அது கிராமத்துப் பெண்களின் வாழ்வியலையும், அவர்களின் நெஞ்சுறுதியையும் பேசும் தமிழ் மண்ணின் ஆவணம். தொடக்க கால வரலாற்றுப் பின்னணி கொண்ட 'வில்லோடு வா நிலவே' முதல், நவீன உலகமயமாதலும் பருவநிலை



மாற்றமும் இந்திய விவசாயிகளை எப்படி வதைக்கிறது என்பதை அறிவியலும் இலக்கியமும் கைகோர்க்கும் பாணியில் படம் பிடித்துக் காட்டிய 'மூன்றாம் உலகப்போர்' வரை அவர் செதுக்கிய ஒவ்வொரு சொல்லும் தமிழன்னையின் அணிகலன்களாக மிளிர்கின்றன.

தண்ணீர் தேசம்

வைரமுத்துவின் பேனா புனைகதைகளைத் தாண்டி, அறிவியலின் ஆழமான உண்மைகளைத் தமிழின் தத்துவ மரபோடு இணைக்கும் அசாத்திய வித்தையைத் தன்னகத்தே கொண்டது. குறிப்பாக, அவரது





புகழ் பெற்ற 'தண்ணீர் தேசம்' புதினத்தில் கடலையும் மீனவ மக்களின் வாழ்வியலையும் பாடியதோடு நின்றுவிடாமல், மனித உடலின் உடற்கூறு அறிவியலைத் தமிழ் மொழியின் செழுமைக்குள் நேர்த்தியாகக் கொண்டு வர முடியும் என்பதை முதன்முதலில் நிறுவிக்காட்டினார். பிரபஞ்சத்தின் நீராதாரத்திற்கும் மனித உடலின் திரவ அமைப்பிற்கும் இடையே இருக்கும் அறிவியல் தொடர்புகளைக் கவித்துவமான மொழியில் அவர் விவரித்த விதம், தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு புதிய அறிவியல் உரைநடைப் பாய்ச்சலாகும்.


விமர்சனங்களை எதிர்கொள்ளும் முதிர்ச்சியும் இலக்கியப் பொறுமையும்

ஒரு பெரும் படைப்பாளி என்பவன் புகழ்ச்சிகளால் மட்டுமே உருவாவதில்லை; அவன் விமர்சனங்களை எதிர்கொள்ளும் விதத்தில்தான் அவனது இலக்கிய முதிர்ச்சி வெளிப்படுகிறது. ஒரு கொடூரமான கொலை பாதகச் செயலைக் கூட மொழியின் அழகியலால் முந்தி நிற்கச் செய்ய முடியும் என்ற வைரமுத்துவின் சில வரிகள் குறித்து, இரண்டு முறை சாகித்திய அகாதமி விருதுகளை வென்ற புகழ் பெற்ற கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் முன்வைத்த விமர்சனத்தை நாம் இங்கு நினைவுகூர வேண்டும். அந்த கடுமையான விமர்சனத்தைக் கண்டு கவிப்பேரரசு சினம் கொள்ளவில்லை. மாறாக, மொழியின் எல்லைகளையும், ஒரு படைப்பாளியாகத் தான் கையாண்ட அழகியல் கோட்பாடுகளையும் மிகப் பொறுமையோடும், உரிய இலக்கிய ஒழுக்கத்தோடும் விளக்கிய அவரது பக்குவம், சமகால எழுத்தாளர்களுக்கு ஒரு ஆகச்சிறந்த வழிகாட்டுதலாகும்.

கருத்தியல் தெளிவும் பாவேந்தரின் நீட்சியும்

தமிழ் இலக்கியப் பரப்பில் கடவுளைக் கொண்டாடி எழுதும் எழுத்தாளர்களுக்கு இங்கு எளிதாக இடம் கிடைத்துவிடும். ஆனால், சமூக அக்கறைகளையும், மனித

உணர்வுகளையும், உயிர்க்கோளத்தின் வலிமையையும் கடவுள் மறுப்போடு ஒரு எழுத்தாளன் இங்கே உலாவி, தமிழில் நீங்காத படைப்புகளை உருவாக்கிய பெருமை புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்குப் பிறகு கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு மட்டுமே உரியது. தான் பிடித்துயர்ந்த கொள்கைகளை எந்த இடத்திலும் விட்டுக்கொடுக் காமல், சமரசம் செய்துகொள்ளாமல் தொடர்ந்து எழுதிய அவரது பேனா வலிமைக்கு, முத்தமிழறிஞர் கலைஞரின் ஆழமான நட்பும் ஒரு உந்துசக்தியாக இருந்திருக்கலாம். அவரது உரைநடைத் திறமைக்கு ஆகச்சிறந்த சான்று 'தமிழாற்றுப்படை'. தொல்காப்பியர், இளங்கோவடிகள், கம்பர் தொடங்கி தற்கால ஆளுமைகள் வரை தமிழை வளர்த்த மாபெரும் சான்றோர்களின் வேர்களைத் துழாவிய அவரது தேடல், தமிழின் ஆதிப் பெருமையை உலகறியச் செய்தது.



வைரமுத்துவின் ஆகப்பெரிய சாதனை என்பது, இலக்கியத்தின் உன்னதங்களைத் திரையிசை என்னும் வெகுஜன ஊடகத்தின் வழியே பாமர மக்களின் இதயங்களுக்குள் கொண்டு சேர்த்ததே ஆகும். 7,000க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ள அவர், இந்திய அளவில் 7 முறை தேசிய விருதுகளைப் பெற்று சாதனை படைத்தவர். ஒரு வட்டார மொழி வழக்கை திரையிசைப் பாடல்களுக்குள் புகுத்தி, அதை உலகத் தமிழர்கள் முணுமுணுக்க வைத்த வித்தையை அவர் செய்தார். எளிய உரையாடல் தமிழைப் பாடல்களில் அமரவைத்து அழகு பார்த்தார். வெறும் காதல், காமம் என்பதோடு நின்றுவிடாமல், தாவரங்களின் பெயர்கள், சிறிய மருத்துவக் குறிப்புகள் முதற்கொண்டு இந்தத் தலைமுறையின் மீது மிகுந்த அக்கறையோடு பாடல்களிலும், தனது மேடைப் பேச்சுகளிலும் எதைச் சொல்ல வேண்டும் என்கின்ற உறுதி எப்பொழுதும் அவரிடம் இருந்ததுண்டு.

தனிமனித விவாதங்களும் தற்கால முரண்பாடுகளும் கால ஓட்டத்தில் கரைந்து போகலாம்; ஆனால் வைரமுத்து என்ற ஆளுமை தமிழ் மொழிக்குச் செய்துள்ள அரும்பணிகள் சரித்திரத்தில் என்றும் அழியாதவை. பத்ம விருதுகளும், சாகித்திய அகாதமியும் தேடி வந்த அவரது நீண்ட இலக்கியப் பயணத்தில், இன்று 'ஞானபீடம்' என்பது வைரக்கல்லாய் வந்து இணைந்துள்ளது. மொழியைக் காத்து, மொழியால் வளர்ந்து, இன்று இந்திய இலக்கியப் பரப்பின் உச்சத்தில் நிற்கும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு இந்த விருது சாலப் பொருத்தமானது.

வாழ்க கவிப்பேரரசு!
வளர்க அவர் தமிழ்ப்பணி!
வெல்க தமிழ்ப்புகழ்!

மா.விஜயராகவன்
ஊடகவியலாளர்

சமூக சேவைக்கு கிடைத்த "பத்மபூஷன்" விருது

Dr. SKM. மயிலானந்தன் அவர்கள் ஒரு சிறந்த தொழில் முனைவர், சமூக மற்றும் நுகர்வோர் ஆர்வலர் ஆவார். SKM. குழும நிறுவனங்களை நிறுவி அதன் தலைவராக உள்ளார். 2013ம் ஆண்டில் இந்தியாவின் மிக உயரிய விருதான பத்ம ஸ்ரீ விருது இவராற்றிய சமூக பணிகளுக்காக வழங்கப்பட்டது. 2025ம் ஆண்டு டில்லி NCR சோன்பட்டில் உள்ள SRM பல்கலைக்கழகம் அவரது சமூக சேவைகளை பாராட்டி அவருக்கு Honouris Causa டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத் தில் ஓர் ஏழ்மையான விவசாயக் குடும்பத்தில் 1945ம் ஆண்டு ஜூன் 18ம் தேதி பிறந்த திரு மயிலானந்தன் அவர்கள் தனது பள்ளி இறுதி வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்றார். அவர் 1983ம் ஆண்டில் கோழிப்பண்ணை யாளர்கள் நலச் சங்கத்தைத் தொடங்கி அதன் நிறுவனத் தலைவரானார்.

தற்போதைய வர்த்தகர்களால் பயன்படுத் தப்படும் ஒரு நவீன கிராமப்புற சந்தைப்படுத்தல் பணிடமாற்று முறையை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் கண்டார். கிராமப்புறங்களில் உள்ள படித்த மற்றும் படிக்காத மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கு வதில் அவர் முன்னோடியாக செயல் பட்டு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புகளை வழங்கினார். சந்தை மற்றும் விலை நிர்ணயம் தொடர்பான விவசாயிகளின் பிரச்சனைகளைப் பற்றி ஆய்வு செய்யவும், கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கவும் கோழிப்பண்ணையாளர்களுக்கு அதைப் பற்றி கல்வி புகட்டவும் 150க்கு மேற்பட்ட கருதரங்குகளையும், விவசாயிகளின் கூட்டங்களையும் அவர் ஏற்பாடு செய்தார்.

அவர் கோழி நண்பன் என்ற கோழி வளர்ப்பு குறித்த மாத இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் ஆனார். குழந்தைகளிடையே நிலவும்



ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிக்க தமிழக அரசின் மதிய உணவு திட்டத்தில் முட்டையையும் கொண்டு வந்ததில் அவர் முக்கிய பங்கு வகித்தார். திரு மயிலானந்தன் அவர்கள் ஈரோடு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் (CPC) தலைவராகப் பணியாற்றி வருகிறார். ஈரோடு பாதுகாப்பு மையம் ஆற்றிய சேவைகளை பாராட்டி இந்திய அரசு 1993ம் ஆண்டு "தேசிய சிறந்த நுகர்வோர் பாதுகாப்பு மையம்" விருது மற்றும் ரூ.50000/ பரிசுத்தொகையையும் வழங்கியது.

திரு. மயிலானந்தன் அவர்கள் 1999ம் ஆண்டு சாமிநாதபுரத்தில் ராஜீவ் நகர், காந்தி நகர் ஆகிய இரண்டு பின்தங்கிய கிராமங்களைத் தத்தெடுத்து அவ்விரு கிராமங்களைச் சேர்ந்த முதியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுடன் மருத்துவ வசதிகளையும் இலவசமாக இன்று வரை வழங்கி வருகிறார். மேலும் அம்மக்களின் திருமணம். பிரசவம் மற்றும் இறுதிச் சடங்குகளுக்கும் தேவையான நிதி உதவிகளை செய்து வருகிறார். அவர் சங்கமம் அறங்கட்டளையை நிறுவி அதன் மூலம் கிராமப்புற மக்களின் பயன்பாட்டிற்காக எரிவாயு தகன மேடையை அமைத்துள்ளார். பெண்கள் அவர்தம் வாழ்வாதாரத்தை தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் தொழிற்பயிற்சிகளான தையல், அழகுக்கலை மற்றும் கேக் பேக்கிங் போன்ற பயிற்சிகளை இலவசமாக வழங்கி வருகிறார்.

திரு. மயிலானந்தன் அவர்கள் கடந்த 37 ஆண்டுகளாக உலக சமுதாய சேவா சங்கத்தின் (WCSC) தலைவராகப் பணியாற்றி வருகிறார். இந்த அமைப்பு "யோகமும் மனித மாண்பும்" (Yoga for Human Excellence) என்ற பெயரில் Certificate, Diploma. UG, PG, M Phil. & Doctorate பட்ட படிப்புகள் மூலம் பொதுமக்களுக் கும் மாணவர் சமூகத்திற்கும் மதிப்பு அடிப்படையிலான பண்பாட்டுக் கல்வியைப் பரப்பி வருகிறது. இதற்காக, WCSCன் கல்விப் பிரிவான "VISION for Wisdom" இவரால் நிறுவப்பட்டுள்ளது. இது 34 பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 2,51,410 மாணவர்கள் இந்தப் படிப்புகளைப் பயின்றுள்ளனர். உலக சமுதாய சேவா சங்கம் மூலம் கிராமங்களை அமைதியான கிராமங்களாக மாற்றும் நோக்குடன், "கிராம சேவைத் திட்டம்" (WCSC VSP) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினர். தமிழ்நாட்டில் 400 கிராமங்களுக்கு மேல் தத்தெடுத்து இதுவரை 1.5 லட்சம் கிராம மக்களுக்கு அவர்கள் இடத்திலேயே இத்திட்டம் மூலம் யோகா மற்றும் தியானம் மற்றும் அறநெறி சார்ந்தப் பயிற்சிகள் இலவசமாக கொடுக்கப்பட்டு வருகிறது. யோகா மற்றும் தியானத்திற் கான அவரது அர்ப்பணிப்புமிக்க சேவைக்காக, அவர் இந்திய யோகா சங்கத்தின் தமிழ்நாடு மாநிலப் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் அவர் தமிழ்நாடு அரசுக்கு ரூ.2 கோடி நிதியுதவி உலக சமுதாய சேவா சங்கம் மூலம் வழங்கினார். ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை அறக்கட்டளைத் தலைவராக இருந்து இலக்கியவாதிகளை SKM இலக்கிய விருது கொடுத்து ஊக்குவித்து வருகிறார்.

இவ்வாறு சமூக சேவைகளை செய்து வரும் எஸ்.கே.எம். மயிலானந்தன் அவர்களுக்கு இந்திய அரசின் உயரிய விருதான பத்ம பூஷன் விருது டில்லியில் 2026 ஜூன் 23ம் தேதி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார். 2013ம் ஆண்டு 'பத்ம ஸ்ரீ' விருது பெற்ற இவருக்கு இந்த ஆண்டு 'பத்ம பூஷன்' விருது கிடைத்துள்ளது. இது இவர் செய்த சமூக சேவைக்கு கிடைத்த பெரும் கௌரவமாக பார்க்கப்படுகிறது.

திரைமொழி மாத இதழ் இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது.

பாக்யராஜ் ஓர் சரித்திரம்

என் திரையுலக முதல் ஆசானாகிய பாக்யராஜ் சாரை சந்தித்திராத காலத்தில் அவரை என்னுடைய பரம எதிரியாகவே பாவித்திருந்தேன். பள்ளிக்காலம் நிறைவடைந்து கல்லூரி காலம் துவங்கியபோது, பாரதிராஜாவும், பாக்யராஜும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்கள். பதினாறு வயதினிலே பார்த்ததிலிருந்து, நான் தீவிரமான பாரதிராஜாவின் ரசிகனாகிவிட்டிருந்தேன். அவருடைய படங்களை குறைந்தது மூன்று அல்லது நான்கு முறையாவது பார்த்து விடுவதோடு, அவரைப்பற்றிய அத்தனை தகவல்களையும் நுனிநாக்கில் வைத்திருந்தேன். எனக்கு எதுவென்றாலும் பாரதிராஜாவிற்கு பிறகுதான். பாக்யராஜ் சார் என்னுடைய எதிர்கட்சி.

அந்நாளில் ஒரு செய்தி பரபரப்பாக பத்திரிகைகளில் அவ்வப்போது சொல்லப்பட்டு, ஹாட் நியூஸாக ஆக்கப்படும். அது என்னவென்றால், பாரதிராஜாவால் பாக்யராஜா ? பாக்யராஜால் பாரதிராஜாவா ? பாக்யராஜ் எழுத்தினால் தான் பாரதிராஜா இத்தனை உயரத்திற்கு வர முடிந்திருக்கிறது என்றும், பாரதிராஜா இல்லையென்றால் பாக்யராஜே கிடையாது என்றும் விவாதங்கள் பொறி பறந்து கொண்டிருந்த காலம். இதுகுறித்த அறிவிக்கப்படாத பட்டிமன்றங்கள் மாணவர்கள் ஒன்றுகூடி அரட்டையடிக்கிற நேரங்களில் அனல் பறக்கும்.

பாக்யராஜ் வெளியேறிய பிறகு பாரதிராஜா எடுத்த கல்லுக்குள் ஈரம் சரியாக ஓடவில்லையே என்று ஒரு விசயத்தை எடுத்துக்கொண்டு வந்து அதகளம் பண்ணுவார்கள். அந்நாளில் பாக்யராஜ் சார் எனக்கு வில்லாதி வில்லனாகவே தோற்றமளிப்பார். அப்போது, சுவரில்லாத சித்திரங்கள் வெளிவந்து சுமாராக தான் போனது. பிறகேன் சுவரில்லாத சித்திரங்கள் பெரிய வெற்றிப்படம் ஆகவில்லை என்று எதிர்வாதம் செய்வேன். அதற்காக உள்ளூர மகிழ்வேன். இத்தனைக்கும் அதிலுள்ள நகைச்சுவையையும், பல காட்சிகளையும் ரகசியமாக மனது ரசிக்காமல் இல்லை. ஒரு கை ஓசையின் போதும் அப்படித்தான். அதில் காட்டப்பட்டிருந்த உருக்கமான காதல் மனதை தைத்தாலும், அந்தப்படம் பெரிதாக ஓடாதது கண்டு உள்ளூர சந்தோஷப்பட்டுக்கொண்டேன். அதன் பிறகு பாக்யராஜ் சார் படங்கள் வரிசையாக வெற்றி பெற ஆரம்பித்த போது அதை கண்ணுறுகையில், காதிலிருந்து வண்டிவண்டியாக புகை வர ஆரம்பித்தது.

அந்த நேரம் பார்த்து நிழல்கள் தோல்விக்கு பிறகு அலைகள் ஓய்வதில்லை மிகப்பெரிய வெற்றியை பெற்றதும், அமுங்கிப்போயிருந்த பல்லான் புடைத்துக்கொண்டு வீரியத்தோடு விண்ணை நோக்கி



மறுபடி முழங்க ஆரம்பித்தது. பாரதிராஜா ஒரு சுயம்பு. அவர் யாரையும் நம்பி இல்லை. அவரால் தான் இவர் என்று முழங்க ஆரம்பித்தேன்.

இதெல்லாம் நான் பாக்யராஜ் சாரிடமே ஆசீவகத்தின் தற்செயல் கோட்பாட்டின் நிமித்தம் உதவி இயக்குநராக வந்து சேருகிற வரை தான். வந்த பிறகு தான் தெரிந்தது. பாக்யராஜ் சார் தான் பாரதிராஜாவின் முதல் ரசிகர் என்பது. உண்மையில் அவர்களுடைய உறவை ஏகலைவனுக்கு துரோணர் மீதிருந்த மரியாதையோடு ஒப்பிடலாம். அந்த அளவிற்கு பாரதிராஜா சாரை அவர் உயிரில் வைத்திருந்தார். சாருடைய புதிய படம் ஏதாவது பாரதிராஜாவிற்கு பிரத்யேக காட்சி அப்போதைய குட்லக் திரையரங்கில் போடுகிறபோது, பாக்யராஜ் சாரையும் பக்கத்தில் உட்காரும்படி சொல்வார். குருவிற்கு பக்கத்தில் உட்கார முடியாமல் அவர் நெளிவார். நான் எப்போதும் அவர் கண்களையே பார்த்துக் கொண்டிருப்பேன். கண்கள் வழியாக தான் அவர் பெரும்பாலும் தகவல்கள் சொல்வார். அவருக்கு ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைகிறதென்றால் அதை அவர் கண்கள் வழியாகவே கண்டுபிடித்து விடலாம். உடனே அருகில் போய் சில சாக்லேட்டுகள் கொடுத்து வருவேன். இப்போது அவர் இருட்டை பயன்படுத்தி நைஸாக வெளியே நகர்வதை கவனித்து பின்தொடர்கிறேன். என்னிடம், “சார் கூட ஒக்கார சங்கோஜமா இருக்கு. நீ கூட இருந்து சாருக்கு என்ன வேணும்னு கேட்டு, நல்லா பாத்துக்கோ. நான் வீட்டுக்கு போயிட்டு, படம் முடியறதுக்குள்ள வந்தர்றேன்” என்று சொல்லிவிட்டு கிளம்பிவிடுவார். அவர்களுக்கும் கதை விசயத்தில் பல சமயம் உரசல்கள் வந்திருக்கலாம். ஆனால், உண்மையில் பாக்யராஜ் சார், தன் குருநாதரான பாரதிராஜாவின் அன்பிற்காக எதையும் செய்ய இறுதிவரை சித்தமாகவே இருந்தார். இருவரும் ஒவ்வொரு விதத்தில்

பாக்யராஜ் சார் மக்களின் பலவீனங்களை எக்ஸ்பிளாய்ட் பண்ணி வெற்றியடைய தெரிந்தவர். அதோடு, மக்களின் பலங்களை எக்ஸ்ப்ளோர் செய்து எப்படி வெற்றியடைய வேண்டும் என்கிற சூட்சுமமும் அறிந்தவர்.

மேதைகள். இரு மேதைகளின் சங்கமம் பல சமயங்களில் இந்திய திரையுலகில் பல அதிசயங்களை நிகழ்த்தியிருக்கின்றன.

அவரிடம் உதவி இயக்குநராக சேர்ந்ததும் அவரோடு நெருங்கிப் பழக, அவதானிக்க நிறைய சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அதில் தெரிந்து கொண்ட முதல் விசயம் அவர் ஒரு நிறை குடம். காரணம், அவர் தன்னுடைய கதைகளையோ, தான் கற்றறிந்த விசயங்களையோ மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க ஒருபோதும் தயங்காதவர். எத்தனை இரைத்தாலும், அவருக்குள் ஊறிக்கொண்டேயிருந்தது. அவர் இந்தியாவின் திரைக்கதை மன்னன் என்று அறியப்பட்டது ரொம்ப கம்மி. அவர் மட்டும் நடிக்காமல் பிற நடிகர்களுக்கு திரைக்கதை எழுதி இயக்கியிருந்தால், நிச்சயம் உலகின் திரைக்கதை மன்னனாக கொண்டாடப் பட்டிருந்திருப்பார். அதற்கு ஓர்



உதாரணம் ஒரு கைதியின் டைரி. அவர் ஒரு தனிரகம். அவர் வழி அவருக்கு மட்டுமேயான வழி. கே.எஸ். கோபாலகிருஷ்ணன் படங்கள் அவருக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும், அவரின் தனித்துவம் அபாரமானது.

அவர் ஏன் இந்திய திரைக்கதையின் ஆசானாக கருதப்படுகிறார் என்றால், அவர் கல்லில் நார் உறித்து காட்டியவர். எதை வேண்டுமானாலும் மாற்றி விடலாம். ஒருவரின் நம்பிக்கையை மட்டும் மாற்ற முடியாது. அது அத்தனை சுலபமல்ல. அசகாயசூரத்தனமான விசயம் அது. அப்படியான ஒரு முடிச்சை தான் அவர் தன்னுடைய பல படங்களில் போடுவார். பிற்பாடு அவரே அதை தன்னுடைய பக்கவாட்டு சிந்தனை வாயிலாக அவிழ்த்தும் காட்டுவார். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், முந்தானை முடிச்சில், நாயகனுக்கு மாற்றான் தாய் குழந்தைக்கு சித்திக்காரி கொடுமை தான் செய்வாள் என்பது ஒரு நம்பிக்கையாகவே மனதில் படிந்திருக்கும். அதை நாயகி எப்படி இறுதியில் போக்கிக்காட்டுகிறாள் என்பதை வெற்றிகரமான திரைக்கதையாக்கியிருப்பார். எங்க சின்னராசாவில் உலகத்தில் என் சின்னம்மாவின் பாசத்திற்கு ஈடுஇணை



எதுவுமில்லை என்று நம்புகிற நாயகனின் அசைக்க முடியாத நம்பிக்கை வழியாக, அதே சின்னம்மாவை உன்னதமான தாயாக உளமாற செய்கிறவிதத்தில் அதன் திரைக்கதையை கச்சிதமாக நகர்த்தியிருப்பார். இவரது ஒவ்வொரு படத்திலும் இப்படியான அசகாயசூரத்தனத்தை அநாயாசமாக அவரது திரைக்கதை உத்திகளின் வாயிலாக செய்துவிடுவதாலேயே, இவர் இந்தியாவின் திரைக்கதை மன்னன் என்று எல்லோராலும் போற்றிப் புகழப்படுகிறார்.

அவர் எப்போதும் பணத்தை பெரிதாக நினைக்க மாட்டார். ரொம்ப தாராளமானவர். அவரின் உற்ற நண்பர்களில் ஒருவரான இயக்குநர் ஆர்.சுந்தர்ராஜன் அவ்வப்போது அலுவலகத்திற்கு வருவார். ஏதாவது விசேசங்களுக்கு வெளியூர் செல்ல வேண்டுமென்றால், தனக்கும் சேர்த்து டிக்கெட் போட்டுவிடு. உன்னோடேயே வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு, ஒரு மணிநேரமாவது பேசிக்கொண்டிருப்பார். அந்த உரையாடல்களை கேட்க ஆயிரம் கோடி காதுகள் வேண்டும். சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிடும். கவுண்டமணிக்கு பிறகு இந்த அனுபவத்தை சுந்தர்ராஜனிடம் தான் உணர்ந்திருக்கிறேன். இருவரும் திரைப்படங்களில் செய்கிற நகைச்சுவையை போல நூறு மடங்கு நிஜவாழ்வில் நிகழ்த்திக்கொண்டே இருக்கிறவர்கள். வாயை திறந்தாலே நகைச்சுவை கொட்டும்.

பாக்யராஜ் சார் மக்களின் பலவீனங்களை எக்ஸ்பிளாய்ட் பண்ணி வெற்றியடைய தெரிந்தவர். அதோடு, மக்களின் பலங்களை எக்ஸ்ப்ளோர் செய்து எப்படி வெற்றியடைய வேண்டும் என்கிற சூட்சுமமும் அறிந்தவர். இரண்டு உத்திகளில் பலர் அவரின் முதல் உத்தியையே பின்பற்றியிருக்கிறார்கள். அரிதாகவே சிலர் அவரின் அந்த இரண்டாவது உத்தியை பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். நான் அவரின் அந்த இரண்டாவது சூட்சுமத்தை தான் அவரிடம் ஊன்றிக்கற்றுக்கொண்டேன். அது தருகிற தன்னம்பிக்கை மகத்தானது. என்னிடம் எந்த கதைக்கருவை தந்தாலும் அதை தரமான, வெற்றிகரமான திரைக்கதையாக விரைவில் மாற்றிக்காட்ட முடியும். பாக்யராஜ் சார் தந்த வரம் அது.

பாக்யராஜ் சாரிடம் நேரடியாக உதவியாளர்களாக வேலை செய்யாவிட்டாலும், அவர் படங்களின் வாயிலாக அவரின் இந்த இரண்டாவது சூட்சுமத்தை கற்றுக்கொண்டு பல அற்புதமான படைப்புகளை உருவாக்கிய இயக்குநர்கள் இங்கே நிறையவே இருக்கிறார்கள். உதாரணத்திற்கு சொல்வதென்றால், சேரனின் பாரதி கண்ணம்மா, எஸ்.ஜே.சூர்யாவின் குஷி போன்ற பல படங்களை சொல்லலாம்.

அவரைப்பற்றி சமீபத்தில் ஒரு நூல் எழுதியிருந்தேன். 'திரைக்கதையில் ஒரு சாகசம்' என்கிற அந்த நூலை படித்துவிட்டு, தொலைபேசியில்



பாக்யராஜ் சார் என்னை அழைத்து, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பாராட்டி பேசினார். அவரின் இளமைக்காலம் மற்றும் அவரது முக்கியமான படங்களில் வெளிப்பட்டிருக்கும் திரைக்கதையின் சூட்சுமம் பற்றி அந்த நூல் திறனாய்வு செய்திருக்கிறது. அந்த நூலை சத்யா பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. அதில் சொல்லாத சில விசயங்களையே இந்த கட்டுரையில் சொல்லி யிருக்கிறேன். அவர் தந்த அனுபவம் ஏராளம் இருக்கின்றன. இருக்கும்வரை அவற்றை தீராமல் சொல்லிக் கொண்டேயிருப்பேன்.

சரித்திர பிரசித்தி வாய்ந்தவர்கள் உலகில் அரிதாகவே அவதரிக்கிறார்கள். ஒரு நூற்றாண்டிற்கு ஒரு முறை தான் இப்படியான அதிசயங்கள் நடக்கும். அப்படியாக திரைத்துறையில் அவதரித்த ஒரு மகான் தான் பாக்யராஜ் சார். இன்று திரைக்கதைகளில் பல புதுமைகளை செய்கிற பல சாதனையாளர்களெல்லாம் அவரின் வழித்தோன்றல்களே. அவரின் சங்கிலித்தொடரே. விதை, அவர் போட்டது. திரைக்கதை சூட்சுமத்தில் அவர் ஒரு ஆல்விருட்சம். அதிலிருந்து எண்ணற்ற திறமையான திரைக்கதையாளர்கள் விழுது பரப்புகிறார்கள். காலந்தோறும் பரப்பிக்கொண்டேயிருப்பார்கள்.

எழுத்தாளர் குலசேகர்

திரை மொழி
PRGI (RNI) No: TNTAM/2023/88599
TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்
THIRAI MOZHI

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

காதுகளால்
சுவாசிக்க முடியுமா?
உன் சுந்தரக் குரல்
சுமந்த காற்று
எம் சுவாசமானது!

குரலால்
குருதி அணுக்களைக்
குதூகலப்படுத்த முடியுமா?
உன் நாணக் குரல்
எம் நாளங்களை
நடனமாட வைத்தது!

துயரங்களைக் கழுவுகின்ற
மழை நீ!
துயரப் பாடல்களாலும்
எம்மை மகிழ்விக்கும்
கலை நீ!
துவளாமல் அடித்த
அலை நீ!
குரல்வளையால்
எமைப் பிடித்த
குரல் வலை நீ!

காதல் பொழுதில்
கனவு நீ!
காமப் பொழுதில்
தினவு நீ!
தனித்து நடக்கும்போது
வழித்துணையாவாய்!
தவித்து அழும்போது
தலையணையாவாய்!

தன் பிள்ளைக்கு மட்டுமே
தாலாட்டு பாடுவாள் தாய்!
தமிழகத்தின் பிள்ளைகளுக்கெல்லாம்
தாலாட்டு பாடியவள்
நீ மட்டும்தான்!

எங்கோ பிறந்து
தமிழிசைக்கு வந்து
வாய்த்தாயே!
அமுத வாய்த் தாயே!
வழியனுப்புகிறேன்!

-கவிஞர் தஞ்சை இனியன்

THIRAI MOZHI TAMIL MONTHLY PRESS REGISTRAR GENERAL OF INDIA
PRGI (RNI) No: TNTAM/2023/88599 Published on 2nd WEEK OF EVERY MONTH

July - 2026

கலைகளின் வழியே கலைஞன் சிரஞ்சீவியே



ஒளிப்பதிவாளர், இயக்குநர் செழியன்

செழியனுடன் எனக்கிருந்த உறவு, இயக்குநர் ஒளிப்பதிவாளர் என்கிற உறவைத் தாண்டியது. இலக்கியம், இசை, ஓவியம், உலக சினிமா ஆகியவற்றின் மீது இருந்த பொதுவான ஈடுபாடுதான் எங்களை நெருக்கமாக இணைத்தது. எங்களது உரையாடல்களில் சினிமாவைவிட, தி.ஜானகிராமன், மீரா, எம்.வி.வி., கரிச்சான் குஞ்சு, வண்ணதாசன், தேனுகா இப்படி பல எழுத்தாளர்களின் எழுத்துக்களும், சங்கீதமும், கவிதைகளுமே அதிகம் இடம்பெறும். அவர் என் உடன்பிறவா தம்பியாகவே இருந்தார்.

எந்தக் கவிதைக்கு நான் மெட்டமைத்தாலும், முதலில் அனுப்பி கருத்து கேட்பது செழியனிடம்தான். அவரது இசை அறிவு அபாரமானது. எனது மெட்டுகளைப் பாராட்டியது விஷயமில்லை. நான் மெட்டமைத்த மூன்று குறுந்தொகைப் பாடல்களைத் தனது செலவில் பதிவு செய்து வெளியிட்டார். அதை வெளியில் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். அதை பணிவாய் அவர் சொன்ன விதமும் அந்த பண்பும் இன்னும் என் மனசிலேயே இருக்கிறது.

இரண்டு மிக முக்கிய ஆவணப் படங்களில் அவர் என்னுடன் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றினார். குறிப்பாக ஜெயகாந்தன் ஆவணப் படத்தில், நான் மனதில் நினைத்திருந்த ஒளி அமைப்பையும் காட்சிப் பாணியையும், தனது கலை உணர்வால் அவர் திரையில் உயிர்ப்பித்தளித்தார். வண்ணம், வடிவம், ஒளி, நிழல் ஆகியவற்றின் வழியாக இயல்பாக மனிதர்களின் உள்ளுணர்வைப் பதிவு செய்வதில் அவர் தனித்துவமான கலைஞர்.

ஒளிப்பதிவாளராக மட்டுமல்ல, புகைப்படக் கலைஞராகவும் செழியன் அபூர்வமான பார்வை கொண்டவர். எழுத்தாளர்களையும், அவர்களின் வாழ்விடங்களையும், சிறு சிறு பொருட்களையும், ஏன் காய்ந்து உதிர்ந்த சிறகுகளையும், தாழ்ப்பாள்களையும் கூட அவர் கவித்துவமாக பதிவு செய்தார். வணிகச் சினிமாவில் இயங்கியபோதும், அவரது மனம் எப்போதும் தீவிர இலக்கியம், இசை, ஓவியம் மற்றும் உலகச் சினிமா ஆகியவற்றிலேயே லயித்திருந்தது.

என்னை தன் மூத்த அண்ணனாக மதித்து பல விஷயங்களில் அவர் ஆலோசனை கேட்டதுபோல, நானும் அவரிடம் கலை சார்ந்த சந்தேகங்களைப் பகிர்ந்துகொள்வேன். அவர் என்னிடம் பலவற்றைக் கற்றுக்கொண்டதாக சில மேடைகளில் சொல்லியிருந்தாலும் அவர் சொல்லாமலேயே நான் அவரிடமிருந்து அதிகம் கற்றுக் கொண்டேன். ஒரு சந்தேகம் என்று கேட்டுவிட்டால், ஒரு தேர்ந்த ஆசிரியர் போல படம் வரைந்து காட்டி நுட்பமாக விளக்குவார். அந்த பொறுமையும் நிதானமும் மென்மையும் பதற்ற மின்மையும் அவரது பிறவிக்குணமா அல்லது தேர்ந்த குணாம்சமா என்று பல சமயம் நான் வியப்பதுண்டு. எல்லாம் இன்று வெறும் நினைவுகளாகிவிட்டன.

அவரது பதினெட்டாம் வயதில் கவிஞர் மீராதான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். 'இவனும் நம்ம பையன்தான் ரவி. கதிரோட நண்பன். ஓவியம் வரைவான். புத்தகங்கள் வாசிக்கிறான். நம்ம அன்னத்துக்கு சில ரேப்பர்ல்லாம் போட்டிருக்கான்' என்று



எழுந்து சென்று அதையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினார். நான் உடனே தேனுகா ஆதிமூலம், ஆர்.பி. பாஸ்கரன், தனபால், சந்தானராஜ், மருது பற்றியெல்லாம் அவரிடம் பேசத் தொடங்கினேன். இடையில் "இவன் பெரிய என்ஜினியரா ஆகப்போறான்" என்றார் மீரா. நமது எல்லா கணிப்புகளையும் பொய்க்கச் செய்து, அதற்கும் மேல் தாண்டி சென்று, வேறொரு உயரத்தில் எப்போதும் நின்றபடி இருந்தவர் அல்லவா அவர்..!

நல்ல சினிமாக்களைப் பற்றி நீங்கள் எழுதுங்கள் அது வேறுமாதியாக இருக்கும் என பல படங்களின் பட்டியலை எனக்கு அனுப்பிக்கொண்டே இருப்பார். இனி அதையெல்லாம் பரிந்துரைக்க செழியன் இல்லை. அவரது பால்ய காலத்தோழன் அய்யப்ப மாதவன் 'இமை நடனம்' என்ற தொகுப்பில் எழுதிய ஒரு கவிதைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

"நின்றபின் சொட்டும்
மழைத்துளிகளில்
இரவு முழுக்க
ஓயாத இசை"

அவர் எங்கும் போய்விடவில்லை. தம் படைப்புகளுக்குள் தன்னை ஒளித்து வைத்துக்கொண்டு காலமெல்லாம் அவர் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டேதான் இருப்பார். அந்த குரலின் இசை ஓய்ந்திருக்கலாம். ஆனால் அதன் மெல் கார்வைகள் என் மனதிற்குள்ளேயே தங்கியிருக்கின்றன.

சென்ற என் பிறந்தநாளின் போது, அவர் அனுப்பிய வாழ்த்தை கனடா விமானத்திலிருந்து இறங்கிய பின்தான் நான் பார்த்தேன். அதையேதான் அவருக்கும் நான் இப்போது சொல்ல விரும்புகிறேன்: "வானத்தில் இருப்பீர்கள். வாழ்த்துக்கள். அங்கேயும் இனிதாகட்டும் எல்லாம்." உடலும் உயிரும் கைவிடினும் கலைகளின் வழியே கலைஞன் சிரஞ்சீவியே.

- ரவிசுப்பிரமணியன்
எழுத்தாளர், கவிஞர், இயக்குநர்



Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**